# மெட்ரோ ரயிலில் தொடர்பில்லாமல் பயணிக்க உதவும் 'ஸ்மார்ட் வாட்ச்'

## 2 மாதங்களில் சோதனையை தொடங்குகிறது


(கோப்புப் படம்)

**சென்னை, செப். 21:** மெட்ரோ ரயிலில் பயணிகள் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் பயணச்சீட்டு பெற்று பயணிக்கும் விதமாக, புதிய 'ஸ்மார்ட்' கை கடிகாரத்தை அறிமுகம் செய்ய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம், மெட்ரோ ரயில் நிலைய தானியங்கி பயணச்சீட்டு நுழைவுவாயிலில் ஸ்மார்ட் கை கடிகாரத்தில் ஒளிரும் வெளிச்சம் மூலமாக நிலையத்தின் உள்ளே சென்று, ரயிலில் எளிதாக பயணிக்க முடியும்.

கரோனா பொதுமுடக்கம் காரணமாக, மார்ச் 22-ஆம் தேதி முதல் ரத்து செய்யப்பட்ட சென்னை மெட்ரோ ரயில் சேவை, கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதி முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியது. முதல்கட்டமாக விமானநிலையம்-வண்ணாரப்பேட்டை வழித்தடத்திலும், இரண்டாம் கட்டமாக பரங்கிமலை-சென்னை சென்ட்ரல் வழித்தடத்திலும் சேவைகள் தொடங்கின. இரு மார்க்கங்களிலும் தற்போது வரை ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

மெட்ரோ ரயில் பயணத்தின் போது நேரடி தொடர்புகளைத் தவிர்க்கும் வகையில், கியூஆர் குறியீடு முறையில் பயணச்சீட்டு பெறுதல், ஸ்மார்ட் கார்டு பெறுதல் ஆகிய தொடுதல் இல்லா பயணச் சீட்டு

வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக, நிலையத்தில் ஊழியருடன் தொடர்பு தவிர்க்கப்படுவதுடன் நேரமும் சேமிக்கப்படுகிறது. இந்நிலையில், மேலும் ஒரு வசதியை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது, தொடர்பு இல்லாமல் பயணச்சீட்டு பெற்று பயணிக்கும் விதமாக, புதிய 'ஸ்மார்ட் கை கடிகாரத்தை' அறிமுகம் செய்ய மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக, மெட்ரோ ரயில் நிலையங்களில் 'ஸ்மார்ட் கை கடிகாரம்' பரிசோதனை இரண்டு மாதங்களில் தொடங்கவுள்ளது. இந்த கை கடிகாரத்தில் அடையாள ரேடியோ அதிர்வெண் அடையாள சிப்புடன் பொருத்தப்பட்டு இருக்கும். அது, மெட்ரோ ரயில் பயணிகள் பயன்படுத்தும் பயண ஸ்மார்ட் கார்டு போல இருக்கும்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

இந்த கை கடிகாரத்தில் டாப்அப் (பணம் நிரப்புதல்) செய்வதற்காக மாற்றுவழியைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். நேரடி தொடர்பு இல்லாமல் செயல்படுத்துவதற்காக ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம். கை கடிகார தயாரிப்பு நிறுவனமான டைட்டனுடன் இணைந்து, மெட்ரோ ரயில் நிலையங்களில் சிப்புடன் பொருத்தப்பட்ட கை கடிகாரத்தைப் பரிசோதித்து வந்தோம். இந்த ஆண்டில் இந்தத்திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டு இருந்தோம். ஆனால், கரோனா பொதுமுடக்கம் காரணமாக, இந்தத் திட்டம் தாமதமாகியது. இரண்டு மாதங்களில் பரிசோதனை தொடங்கப்படும்.

ஸ்மார்ட் கை கடிகாரத்தில் சிப் நிறுவப்படும். பயணிகள் ஸ்மார்ட் கார்டு போல, இதிலும் தானாகவே கட்டணத்தை வசூலித்துக்கொள்ளும். அதே நேரத்தில், டாப்அப் மாறுபடுகிறது. ஸ்மார்ட் கார்டுகளை, மெட்ரோ ரயில் நிறுவன செல்லிடப்பேசி செயலி அல்லது நிலையத்தில் உள்ள டிக்கெட் வழங்கும் எந்திரம் மூலமாக டாப்அப் செய்ய முடியும்.

ஆனால், ஸ்மார்ட் கை கடிகாரத்தை ரீசார்ஜ் செய்வதற்காக டிக்கெட் கவுன்ட்டர் ஊழியரிடம் கொடுக்க வேண்டும். கை கடிகாரத்தைக் கொடுக்க எத்தனை பயணிகள் விரும்புவார்கள் என்பது தெரியவில்லை. எனவே, இது சவாலாக இருக்கும் என்றனர்.